இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

ஜனாதிபதியின் செயலாளர்,

பிரதம மந்திரியின் செயலாளர்,

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்,

அனைத்து மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,

**பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2020**

**அரச சேவை மற்றும்**

**மாகாண அரச சேவை உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் தொடர்பான நெறிப்படுத்தல்கள்.**

இலங்கை அரசியல் யாப்பின் உறுப்புரை 170 இற்கமைய அரச ஊதியம் பெறுகின்ற உத்தியோகத்தர்களை "அரச உத்தியோகத்தர்கள்" என வரைவிலக்கணப்படுத்தியுள்ளது. அது தண்டனை சட்டக்கோவையின் பிரிவு 19 இல் மேலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இலங்கை அரசியல் யாப்பின் 04 வது உறுப்புரைக்கமைய அனைத்து அரச ஊழியர்களும் அரசியல் யாப்பில் அங்கீகரித்து பிரகடனப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிப்பதுடன், அதனை பாதுகாக்கவும் கடமைப்பட்டுள்ளனர். அத்தோடு அரசியல் யாப்புக்கான 06 வது திருத்தத்தின் ஊடாக அரசியல் யாப்புக்கு அமைவாக செயற்படுவதாக அனைத்து அரச உத்தியோகதர்களும் சத்தியப் பிரமாணம் செய்துள்ளனர். அரசியல் யாப்பின் 12 வது உறுப்புரைக்கமைய சட்டத்தின் முன் யாவரும் சமம், மற்றும் சட்டத்தின் சமமான பாதுகாப்பு அனைவருக்கும் பொதுவானதாகும்.

வாக்களிக்கும் உரிமை, அடிப்படை உரிமை என இலங்கை உயர் நீதிமன்றம் பிரகடனப்படுத்தியுள்ளது. இதனடிப்படையில் வாக்களிப்பு இடம்பெறும் நேரத்தில், நடைபெறும் தேர்தல் நாட்டில் மற்றைய நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு மற்றும் அரசியல் அமைப்பிற்கு இணங்க நடைபெறுகின்றதா என்பதை உறுதிப்படுத்த சகல உத்தியோகத்தர்களும் கடமைப்பட்டுள்ளதோடு, அவ் அவ் பொறுப்புக்களில் உள்ள அரச அதிகாரிகளுக்கு அச்சட்டங்களுக்கு அமைவாகவும், நீதியாகவும், பக்கச்சார்பின்றியும் தங்களது உத்தியோகபூர்வ கடமைகளை செய்வதற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

அரச உத்தியோகத்தர்கள் பொறுப்புக்களை முறைகேடாக பாவித்தல் அல்லது சட்டத்தின் வரையரையை மீறி செயற்படுவதோடு, நிறைவேற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்றாமல் இருத்தலும், துஷ்பிரயோகம் செய்தல், காரணமின்றி தாமதப்படுத்தல் போன்றன அரசியல் யாப்பின் படி அடிப்படை உரிமை மீறல்களாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களின்போது குறிப்பிட்ட அந்த உத்தியோத்தரகளுக்கு எதிராக புலனாய்வு மற்றும் விசாரணைகளை மேற்கொள்ளவும், அவர்கள் தொடர்பாக செயற்படவும் 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் படி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இருக்கிறது.

இதற்கிணங்க ஆணைக்குழுவினால் இத்தேர்தல் காலப்பகுதியில் சுதந்திரமான மற்றும் நீதியான தேர்தல் நடைபெறுவதற்காக அரச உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை பொறுப்புடன் மேற்கொள்கின்றார்களா? என்பது தொடர்பில் கண்காணிக்கப்படும்.

எனவே கீழ் குறிப்பிட்டுள்ளவாறு செயற்படுவதற்கு தாங்கள் உட்பட தங்களது நிர்வாகத்திற்கு கீழ் இயங்கும் நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் அறியப்படுத்துமாறும், தெளிவுபடுத்துமாறும் இதன் மூலம் அறிவித்துக்கொள்கின்றேன்.

- தங்களின் அனைத்து அலுவல்களையும் சட்டத்திற்கிணங்க, பக்கச்சார்பற்றவகையில், நீதியாகவும் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.
- சட்டம் அமுல்படுத்தாதிருத்தல், ஓர் பிரிவினருக்கு மாத்திரம் சாதகமான விதத்தில் பக்கச்சார்பாக அதிகாரங்களைப் பயன்படுவது (உதாரணம்: சட்டத்தை மீறும் வகையில் சில அரசியல் கட்சிகளுக்கு / குழுவுக்கு பொது ஆதனங்கள் மற்றும் வளங்களைப் பயன்படுத்த அனுமதித்தல்), என்பவற்றின் விளைவு அடிப்படை உரிமை மீறலாகும். அரச பொறுப்புக்களுக்கு மேலதிகமாக சட்டத்தை நடைமுறைப்படுத்தாமை மற்றும் சட்டத்தை பொறுற்படுத்தாதிருத்தலால் ஏற்படும் உரிமை மீறல் தொடர்பாக உத்தியோகத்தர்கள் அத்தகைய மீறல்கள் தொடர்பாக தனிப்பட்ட பொறுப்பு சுமக்க வேண்டும்.

இந்த அறிவித்தலானது 1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டத்திற்கு இணங்க வழங்கப்படுகின்றதென்பதை கவனத்திற்கொள்ளக.

கலாநிதி தீபிகா உடகம
தவிசாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
13 ஜூலை 2020